உ

சிவமயம்



அனலைதீவைச் சேர்ந்த

## புளியந்தீவுத் திருப்பதி

# நாகேச்சுரக் கடவுள்

# ஸ்ரீ நடராசமூர்த்தி


# தோத்திரப் பிரபந்தத் திரட்டு

நாகேச்சுரப் பதிகம், ஸ்ரீ நடராசர் திருஊஞ்சல்
வாழி, எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம்.

பொது சன நூல் நிலையம்
யா. அ. [illegible]. உ.[illegible] அலுவலகம்
அனலைதீவு

உ

சிவமயம்



அனலைதீவைச் சேர்ந்த

புளியந்தீவுத் திருப்பதி

# நாகேச்சுரக் கடவுள்

# ஸ்ரீ நடராசமூர்த்தி

# தோத்திரப் பிரபந்தத் திரட்டு

நாகேச்சுரப் பதிகம், ஸ்ரீ நடராசர் திருஊஞ்சல்
வாழி, எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம்.

வெளியிட்டோர் :

திரு. ப. நடராசா அவர்கள்

அனலைதீவு.

1976

உ

சிவமயம்

# முன்னுரை

அனலைதீவு தென்கீழ்த் திசையில் சிவபூமி எனப் போற்றப்படும், புளியந்தீவில், மூர்த்தி, தலம், தீர்த்த மகிமையும், புராதன சரித்திரப் பெருமையும் வாய்ந்த நாகேஸ்பரன் கோவில் என வழங்கும் சிவாலயம் உளது. இந்த ஆலயத்துக்குப் பிற ஊர்களிலும், உள்ளூரிலுமிருந்து தினந்தோறும் அடியார்கள் வந்து தெரிசனை செய்து விரும்பிய இஷ்ட சித்திகளைப் பெறுவர். இங்கே வருடா வருடம் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை உற்சவம் விசேடமாகவும், கிரமமாகவும் நடைபெறும். ஆருத்திரா தெரிசனத் திருநாளில் நடராசமூர்த்தியின் ஊஞ்சல்விழா நடைபெறும். அப்பொழுது படிப்பதற்கு ஊஞ்சல் இசைப் பதிகம் இயற்றும்படி அன்பர்கள் விரும்பியபடிக்கு இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்பு அடியேன் இந்த "ஸ்ரீ நடராசர் திருவூஞ்சல்" பாடியுள்ளேன். எக்காலமும் இந்த ஊஞ்சல் பதிகம் ஓதியே, விழா நடைபெறுகிறது. அன்பு காரணமாகச் சிற்றறிவுடையோன் வாழ்த்திப் பாடிய இச்செய்யுள்களில் குற்றங்களைந்து குணத்தை ஏற்றுக்கொள்வது கற்றறிந்த மேலோர் கடன்.

நவாலியூர், திரு. க. சோமசுந்தரப்புலவர் அவர்களால் பாடப்பெற்ற நாகேச்சுர பதிகத்தையும் தேடி எடுத்து அச்சிட்டுப் புத்தகமாய் வெளிப்படுத்த சேர்த்திருக்கிறேன்.

நாகேச்சுரக்கடவுள், ஸ்ரீ நடராசமூர்த்தி, தோத்திரப் பிரபந்தத்திரட்டு என்னும் இச்சிறிய நூலை அச்சிட்டு வெளிப்படுத்த சிவ தொண்டன் திரு. ப. நடராசா அவர்கள் முன்வந்திருக்கிறார். இவருக்கு எல்லாம்வல்ல நடராசப்பெருமான் திருவருள் கைகூடப்பெறுக.

**திரு. ஐ. ஆறுமுகம்**
அனலைதீவு

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# புளியந்தீவு
# நாகேச்சுரப் பதிகம்

---

## விநாயகர் - காப்பு

### வெண்பா

பேராழி நாப்பட் பிறங்கு புளியந்தீவிற்
சேராதி நாதன் கவிசிறக்கக் — கூராழிக்
கையானனத் தனடி காணுதான் பெற்றமுதற்
கையான னத்தனடி காப்பு.

## சரசுவதி

பூவாயிற் கொண்டு பொறியரவம் பூசைசெயுந்
தேவாழ் புளியூர்ச் சிவபெருமான் — பாமாலை
ஓதத்துணை புரியு முள்ளத்துறை கலைமான்
பாதத்துணை புரியும் பார்.

## குரு

செந்தமிழ்ச் சொல்பூவாகச் சேருமன்பு நாராக
எந்தனொரு நாவே இருகரமாய்ப் — பந்தவினை
போக்கும் புளியூர்ப் புனிதன் பாமாலைசெயக்
காக்குங் குருமணி பொற்கால்.

பொது சன நூல் நிலையம்
யா. அ. ச. உப அலுவலகம்
அனலைதீவு

## நூல்

பொன்பூத்த கொன்றையுங் கூவிளமும் மத்தமும்
புனல்பூத்த நதியு மதியும்
பொலிகின்ற சடைமுடியு மலிகின்ற மெய்க்கருணை
பொழிகின்ற சோதி முகமும்
தென்பூத்த வெண்ணீறு சண்ணித்த மேனியும்
திசைபூத்த நாற் றோள்களும்
தீயமல வலிபோக முயலகன் முதுகிலே
திருநடன மிடு சரணமும்
மின்பூத்த கருணைப் பிராட்டியொரு பாலுமாய்
வெள்ளை விடைமீதி லடியேன்
வெவ்வினைப் பிறவிப் பெரும்பிணி யழித்தழிவில்
வீடுதர நாடி வருவாய்
நன்பூத்த பேராழி நடுவிலே புளியூரில்
நன்றமர்ந் தருளு மிமையோர்
நாதனே உயர்ஞான போதனே யருள்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 1

ஆழிசூ ழுலகெலா மாகியே யுடனாகி
அவைகட்கு வேறு மாகி
அருவாகி யுருவாகி யறிவாகி ஒளியாகி
ஆனந்த நிறைவு மாகி
ஊழி தோறுலவாத ஒன்று யிரண்டாகி
ஓரைந்து மையைந் துமாய்
ஓங்கார வடிவாகி யுளதாகி யிலதாகு
முன்னுடைய உண்மை நிலையை
வாழியுன் னருளமுத முண்டவர் களறிவார்கள்
மற்றவர்க ளறிய வசமோ
வற்றாத அருளமுத வாரிதனி லொருதிவலை
வறியனே னுக்கு மருள்வாய்
நாழி நெற்கொண்டறம் வளர்த்த மரகதவல்லி
நாயகா புளியூரில் வாழ்
நாதனே உயர்ஞான போதனே யருள்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 2

செம்பிற் களிம்பென்ன வென்னொடு கலந்தவத்
தியமல வலி யிருளிலே
செய்கை யுடனறிவிச் சையற்று முழுமுடமாய்ச்
சிலைபோற் கிடந்த வெனையும்
பம்பு பேரருளினால் மாயைதனி லொழியாத
பழவினைத் தொடர்பு நாடிப்
பயிலுமுடல் கருவியிட நுகர்வுதந் தொருவாறு
பற்றறிவு தொழில் விளக்கி
அம்புவியில் நல்லனவு மல்லனவு மறிவித்து
னடியடைய விடவது மறந்
தையகோ பலகோடி பிறவியைப் பாழாக்கி
யவலித் தரற்று கின்றேன்
நம்புதுணை கைவிட்ட வேழையைக் காத்தருளை
நல்குவாய் புளியூரில் வாழ்
நாதனே யுயர்ஞான போதனே யருள்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 3

எங்குமுன் னருளாணை எங்குமுன் னருளாடல்
எங்குமுன் னருள் விளக்கம்
எங்குமுன் னருளிறைமை எங்குமுன் னருள்முறைமை
எங்குமுன் னருள் வெள்ளமாம்
தங்குமவ் வருளான வெள்ளப் பெருக்கிலே
தலைமுழுகி நின்று மரணத்
தாகந் தணிக்காது பேய்த்தே ரைநீரென்று
தலையால் நடந் திழைத்தேன்
அங்கங்கு நிகழ்கின்ற அவையவை யிலுனையறிந்
தனுபவிக் கின்ற சுவடொன்
றையனே யுமைமேவு மெய்யனே குருவாகி
அறிவிக்க வினிவரு குவாய்
நங்குமர மூர்த்தியாய் ஆனைமுகனாய் மேவி
நலலருள் செய்புளி யூரில்வாழ்
நாதனே உயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 4

தாமரைக் கண்ணனும் பிரமனுந் தம்மிலே
தற்பெருமை பேசி யேசிச்
சண்டையிடும மயத்திலவர் நடுவி லொருசோதி
தனிமேரு மலே போல்வரக்
காமரன மாகியுங் கேழல்வடி வாகியுங்
கதிர்முடியு மடியு மறியார்
கண்பிசைந் தழுதுகை கட்டி முன்னிற்கநீ
காட்டுசிவ லிங்க வடிவை
மாமறை சொல்வாயனும் மாயனும் வானவரும்
மானவரு மாவு மாவும்
மாதவரு மாதவருமம் புலியுமம் புவியும்
வந்திக்க வருள் கூருவாய்
நாமரைக் கணமேனும் வந்திக்கு மொருவரம்
நன்றருள் செய்புளி யூரில்வாழ்
நாதனே உயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 5

அங்கிங்கெனு தெங்குமாய் நிறையு முன்கருணை
அருவுருவை வேற்ற ரசருக்
கஞ்சிப் பெயர்த்தெகின புரியிலொரு கொண்றைநிழல்
அன்பர்கள் மறைத்து வைக்கத்
தங்குமப் புண்ணியத் தலத்தினில் முளைத்தெழுந்
தாணுவே சசி சேகரா
தற்பரா சர்ம்பசிவ சிற்பரா குஞ்சிதச்
சரணபவ மரண வினைதீர்
சங்கரா கங்கா தராவரக ராகுல
தாரியே காமா ரியே
சம்புவே வெள்ளி வேதண்ட மணிகண்டனே
சாம கண்டா வகண்டா
நங்குறை முடிக்கவரு நம்பனே செம்பொனே
நல்லருள்செய் புளியூரில் வாழ்
நாதனே உயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 6

சிந்தையிலறி வெனுஞ் ஞீமிறன்பு மலரினிற்
சேர்த்திடு மருட் டேறலே
தேறலின் தெளிவே தெவிட்டாத மதுரமே
திகழ் மதுரமரு ளின்பமே
வந்தவரு ளின்பப் பெருக்கிலே யெழுகின்ற
மாறு வுளக் களிப்பே
மாசற்ற செம்பொனே யமுத சஞ்சீவியே
மலவிருடு மிக்கு மொளியே
எந்தை இன்னும் பிறந்திறந்து உளலாதுஇவ்
வேழைக் கிரங்க வருநாள்
எந்த நாளந்த நாளென்னுடைய வாழ்நாளி
லெய்து நாளோ வறிகிலேன்
நந்தலறு துறைநயினை யருகில் வளர்புளியூரில்
நாயகா இமையோர் தொழும்
நாதனே உயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 7

முத்தொத்த பற்கள்சுரை வித்தொத்த முறியொத்த
முழுமேனி சரு கொத்தது
முளையொத்த முதுகுவளை சிலையொத்த தெழில்மொய்ம்பு
முழவொத்த முரு டொத்தன
கொத்தொத் திருண்டகுழல் குயிலொத்ததிப் பொழுது
கொக் கொத்த தூறெடுங்கிக்
கூடொத்த தினிமுதுமை குறுகிய புன்மனக்
கோதினுங் குறுக வில்லை
அத்தத்தி லாசையும் மங்கையர் மயக்குமோ
ரணுவளவு மாற வில்லை
ஆங்கார மெள்ளளவு மகலவிலை யேழைநா
னருள் பெறுவ தெக்காலமோ
நத்தொத்த பொற்களத் துமையம்மை யிடமேவு
நாயகா புளியூரில் வாழ்
நாதனே உயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 8

…ண்சுமந்தாய் கங்கை மதிசுமந்தாய் விறது
மறுகிலே முடி சுமந்தாய்
மன்னுமடியார்க் கெளியனும் பெயர் சுமக்கநீ
மான் மழுப்படை சுமந்தாய்
பொன்னின் களத்திலே கறைசுமந் தாய்வலிய
போரில் வில்லடி சுமந்தாய்
புத்த வேடத்தர் கல்லெறி சுமந்தாயிவைகள்
போதாம லுதை சுமந்தாய்
என்னளவி லிப்பழிகள் சுமவாம லுன்னுடைய
விணையடி சுமக்க வருள்வாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லையி
லெழுந் தருளு நடராசனே
நன்னுதற் கண்கொண்டு காமனை யெரித்தமறை
நாயகா புளியூரில் வாழ்
நாதனே உயர்ஞான பேரதனே யருண்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 9

செங்குருதி நீர்சோர விழியிடந் தப்பியுஞ்
சிறுவனைக் கறி சமைத்துஞ்
செல்வமனைவியை நல்கியும் பொய்யை மெய்யென்று
சீவனை மகிழ்ந் தளித்தும்
அங்குபல ருன்னு;டைய திருவரு ளடைந்தார்கள்
அதுகண்டு நானு மடைதற்
காசைகொள் வதுகான மயில்கண்டு வான்கோழி
யாடவிலை வதுபோலு மால்
தங்கு பேராசைக்கு வெட்கமிலை யென்னுமத்
தன்மையா லின்று நாயேன்
சாமியுன் திருவருளை வேண்டுகின்றேன் சிறிது
தந்தென்னை யாள வருவாய்
நங்குஞ் சரக்குமர தாயகா புளியூரில்
நன்றமர்ந் தருளு மிமையோர்
நாதனே உயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச் சுரக் கடவுளே. 10


அங்கணு போற்றி மறையந்தணு போற்றிதிசை
அம்பரா போற்றி விடைசேர்
அம்பிகா பதிபோற்றி சம்புசிவ போற்றியெமை
யாளுடைய முதல்வ போற்றி
திங்களாறிய சடைச் சங்கரா போற்றிதென்
தில்லை நடமாடி போற்றி
செங்கை யனலேந்து வரபுங்கவா போற்றியர
சிவமகா தேவ போற்றி
பொங்கரா பூசித்த புண்ணியா போற்றியற்
புதநட புராண போற்றி
பூதநாதா போற்றி வேதகீதா போற்றி
போக்கு வரவின்றி நின்ற
நங்கணுயக போற்றி யென்றுனைப் போற்றிசெய
நல்லருள்செய் புளியூரில் வாழ்
நாதனே உயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச்சுரக் கடவுளே. 11

திருச்சிற்றம்பலம்

நவாலியூர்

திரு. க. சோமசுந்தரப்புலவர்

அவர்களால் பாடப்பெற்றது




தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

(படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.)

பொது சன நூல் நிலையம்
யா. அ. ச. உ. ப அலுவலகம்
அனலைதீவு

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## புளியந்தீவு
# ஸ்ரீ நடராசமூர்த்தி திரு ஊஞ்சல்

## காப்பு

ஆக்கியளித் துயிரனைத்தும் தானே யாகி
அனவரத தாண்டவஞ்செய் தடியார் காண
வாக்கு மனோதீதத்துக் கப்பா லாகி
மன்னுநட ராசர்திரு வூஞ்சல் பாட
பூக்கமழும் புரிசடையெம் பரனார் மூன்று
புவனமெலாம் விக்கினங்கள் போக்கும் வண்ணம்
காக்குமுயர் பதவிகொடுத் துதவும் மேலாங்
கணபதி பொற்பத கமலம் காப்ப தாமே. 1

## நூல்

கதிருலவு மிருநாகந் தூண தாகக்
கனகமெனு மொருநாகம் விட்ட மாகப்
பதியுலவு திசைநாகம் பரு நாணாகப்
பார்சுமக்கும் படநாகம் பலகை யாக
நிதியுலவு மரவமணி யாரந் தூக்கி
நித்தியமாய யனமைத்த வூஞ்சல் வைகி
மதியுலவு சோலைதிகழ் புளியந் தீவில்
மருவுநட ராசபதி ஆடீ ரூஞ்சல். 2

திருமகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்டத்
தெய்வரம்பை மேனகையார் நடன மாட
அரியு மயனுந் தூபதீபங் காட்ட
அமரர்கள் கற்பகமலரா லருச்சித் தேத்தக்
குருநந்தி வேத்திரங் கொண் டுலாவி நிற்பக்
குலமறையோ ரிருக்காதி வேத மோதப்
பெருவளஞ்சேர் புளியநகர்ப் பதியில் மேவும்
பெருமநட ராசபதி ஆடீ ருஞ்சல். 3

விண்ணொளிரு மிந்திரவி கவிகை தாங்க
மேனிருதி யாலவட்டந் தடக்கை பற்ற
பண்ணவர்கோன் சாமரை காளாஞ்சி கொள்ளப்
பாங்கிலுறு நிதியரசன் அடப்பை யேந்த
தண்மையுள பனிநீரை வருணன் தூவச்
சத்தி சிவகாமியிடப் பாகம் மேவ
நண்ணுபுளி யந்தீவிற் கோவில் கொண்ட
நாதநட ராசபதி ஆடீ ருஞ்சல். 4

அண்டமெலாஞ் சரமசர வர்க்க மாட
அரியகண நாதர்முனி வோர்க ளாட
தொண்டர் பதஞ்சலி வியாக்கிரம ராடத்
தோற்று முகமைந்தாடச் சூல மாட
வண்டுபடி கொன்றையந்தார் முடிமீ தாட
மழுவாட மரையாட மான்நின் றாட
எண்டிசையும் புகழ்புளியந் தீவில் மேவும்
இறைவ நடராசபதி ஆடீ ருஞ்சல். 5

அரவாடப் பிறையாடக் கங்கை யாட
அருள்வரத மபயகர மசைந்தே யாடக்
கரியுரித் தோலுடையாடக் கனலு மாடக்
காதிலணி குண்டலங்கள் கலீரென் றாடப்
பிரம கபாலங்களென்பு மாலை யாடப்
பெட்புமிகு கயிலாசப் பிறங்க லாடப்
பரவுபுளி யந்தீவுப் பதியில் மேவும்
பரம நடராசபதி ஆடீ ருஞ்சல். 6

அந்தரதுந்துபி யுடுக்கை கான மார்ப்ப
அதிர்முரசந் தண்ணுமை பேரொலியைச் செய்ய
உந்துகுழல் வீணைதுளைக் கருவி யூத
உம்பரில் நாரதமுனிவர் கீதம் பாட
கந்தருவர் மலர்மாலை கையி லேந்தக்
கணபதியும் முருகனும் வந்தருகில் சேரச்
சிந்துசூழ் புளியநகர்ப் பதியில் மேவும்
ஸ்ரீமந் நடராசபதி ஆடீ ரூஞ்சல். 7

செந்தமிழ்ச் சம்பந்த ரப்பர் சுந்தரேசர்
தேவாரத் திருமுறையைச் செப்பி யேத்த
அந்நமிலா அதிமதுர வாச கத்தை
அள்ளியள்ளி மாணிக்க ருருத்தி நிற்ப
சந்தான குரவர் பல்லாண் டிசைப்பத்
தக்கதிருப் புகழருண கிரியார் பாடச்
சுந்தரஞ்சேர் புளியநகர்ப் பதியில் மேவும்
சுவாமி நடராசபதி ஆடீ ரூஞ்சல். 8

ஆரணத்தினுட் பொருளே ஆடீ ரூஞ்சல்
அங்கரன மந்தானவரே ஆடீ ரூஞ்சல்
காரணனே கங்காளா ஆடீ ரூஞ்சல்
கன்மவினை தவிர்ப்பவரே ஆடீ ரூஞ்சல்
தாரணியும் மார்பினரே ஆடீ ருஞ்சல்
தத்துவங்கள் கடந்தவரே ஆடீ ரூஞ்சல்
பூரணனே புளியநகர்ப் பதியில் மேவும்
புனித நடராசபதி ஆடீ ரூஞ்சல் 9

தற்பரனே சம்பு சதாசிவனே போற்றி
சங்கரனே பொங்கரவந் தரித்தாய் போற்றி
சிற்பரனே சபாபதியே தேவே போற்றி
திருவாத வூரரின் சற்குருவே போற்றி
பெற்றமுயர்த்தருள் புரியும் பிரானே போற்றி
பிஞ்ஞகனே போற்றியென்று அடியா ரேத்த
அற்புதஞ்சேர் புளியநகர்ப் பதியில் மேவும்
ஆதி நடராசபதி ஆடி ரூஞ்சல். 10

## வாழி

திருமேவு சைவநெறி சிறந்து வாழி
சிவனமரும் புளியநகர்ப் பதியும் வாழி
பருவமழை முகில்வாழி பசுக்கள் வாழி
பன்னுசதுர் வேத சிவாகமங்கள் வாழி
தருமநிலை மறையோர்கள் மன்னர் வாழி
சகம்வாழி ஊஞ்சலிசைத் தமிழும் வாழி
அருநிதிசேர் அனலைநகரடியார் வாழி
ஆனந்த நடராசர் வாழி வாழி.

## எச்சரிக்கை

அருவாகிய உருமேவிடும் அரனே சிவபரனே
திருவாழ்புளி யந்திவமர் தேவே எச்சரிக்கை
எங்கள் கோவே எச்சரிக்கை.

சனகாதிய முனிவர்க்குமெய்த் தருமம் புகல் குருவே
அனலேந்திய மலர்க்கையுடை அமலா எச்சரிக்கை
எங்கள் விமலா எச்சரிக்கை.

திசையெங்கு மொலிக்கும்பல சின்னங்களு மூத
இசைகொண் டெழுந்தருளும் பரஈசா எச்சரிக்கை
எங்கள் நேசா எச்சரிக்கை.

இடமான சிதாகாச மிலங்கும் சுடரொளியே
நடராச சந்திரசேகர நாதா எச்சரிக்கை
எங்கள் நீதா எச்சரிக்கை.

## பராக்கு

முன்னைப் பழப்பொருட்கு முன்னேய் பராக்கு
மூவற்கும் மேலான முதல்வா பராக்கு
இன்னற் பிறப்பறுக்கும் எந்தாய் பராக்கு
எங்கும் வியாபித் திருப்போய் பராக்கு
சீர்பெற்ற அடியவர்க் கெளியோய் பராக்கு
சிந்தனைக் கெட்டாத சிவனே பராக்கு

பேருருத்திர உமா பதியே பராக்கு
பிரமனறியாத திரு முடியோய் பராக்கு

காலனை யுதைத்திடுங் காலா பராக்கு
கறைமிடற் றோனந்தி வண்ணா பராக்கு
சீல எண்குணமுடைய தேவே பராக்கு
சித்தராகிய சொக்க நாதா பராக்கு

கனகசபையருள் நடன கர்த்தா பராக்கு
காமனை யெரித்திடுங் கண்ணா பராக்கு
புனைகழ லணிந்த பொற்பாதா பராக்கு
புளியூரின் நடராச பதியே பராக்கு.

## லாலி

வேதமுடி யானவர்க்கு லாலி சுப லாலி
வேண்டுவர மீபவற்கு லாலி சுப லாலி
சோதிமலை யானவர்க்கு லாலி சுப லாலி
சுத்தபரி பூரணற்கு லாலி சுப லாலி

ஆதியந்த மற்றவர்க்கு லாலி சுப லாலி
அர்த்தநாரீஸ் வரற்கு லாலி சுப லாலி
போதநட ராசருக்கு லாலி சுப லாலி
புளியந்தீ வையனுக்கு லாலி சுப லாலி

## மங்களம்

முத்தி விநாயகர்க்கும் மங்களம்
முருகன் வயிரவற்கும் மங்களம்
சத்தி சிவகாமிக்கும் மங்களம்
சனிமுதற் கோள்களுக்கும் மங்களம்
பத்திமிகு நந்திக்கும் மங்களம்
பதிபுளியந் தீவுக்கும் மங்களம்
சித்திமணி வாசகர்க்கும் மங்களம்
தெய்வநட ராசருக்கும் மங்களம்

திருச்சிற்றம்பலம்.

அலலைதீவு

**திரு. ஐ. ஆறுமுகம்**
அவர்களால் பாடப்பெற்றது.

## சிறப்புப் பாயிரம்

அரவுதிருமலர் கொய்து அமலைபத மருச்சிக்க
வணியார் சோலை
விரவுமொருமணி நாடு அனலைநகர் அதன்சிரமாய்
விளங்கும் தானம்
புரவலருமணி நின்று புகழ்பாட மிளிருமொரு
புளியந் தீவில்
நரருயர வெழுதளியில் நடனமிடு நடராச
பரமனுர் மேல்,

இனியதமிழ்ப் பண்ணைமல ரெடுத்தன்பு நார்தொடுத்
திங்கெல்லா ருள்ளங்
கனியவிசை வழுவாது கவினவிலக் இயவளமுங்
காணத் தந்தான்
தனியிறைவனருள் கொண்டு தமிழுண்டு கவிதைமழை
தருமா றின்றி
மனிதரணு வுலகத்து மாளாது வாழுகின்ற
வகை யினுனே,

திருவூஞ்ச லெச்சரிக்கை பராக்குடனே சுபலாலி
செப்பி வாழ்த்தி
மருவுதிரு மங்களமும் பாடியுயி ருய்யுமுக
மாகச் செய்தான்
கருவிலுருவான் புலமைக்கு மணன் றிருநீறு
காலுந் தூயோன்
அருவுருவை யறியமுனை யனலையிலே யாறுமுகத்
தறிஞன் ருனே.

நயினைக்கவி

**திரு. ஆ. இராமுப்பிள்ளை**

அவர்களால் பாடப்பெற்றது.

அச்சுப்பதிப்பு :
விவேகானந்தா பிறின்ரேஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்,